## கொழும்பு பல்கலைக்கழகம் - 2018

-----------------------------------------------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக் கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையில் கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக் கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு

எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக் கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக் கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான நிதி மற்றும் முகாமைத்துவ பீடத்தின் முற்கொடுப்பனவு ரூபா 487,670 தொகை எனினும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 431,051 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 56,619 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முற்கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 56,619 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கை இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) மருத்துவபீட கட்டிடம் நிர்மாணிப்பதற்காக பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 955,718,850 தொகை திறைசேரியில் இருந்து பெற்றுத் தருவது என்ற இணக்கம் ஒன்று இன்றி பலவின கடன்பட்டோரின் கீழ் திறைசேரியில் இருந்து கிடைக்க வேண்டியது என காட்டப்பட்டிருந்தது. | 2019 ஏப்ரல் அளவில் ரூபா 75,437,445 தொகை பல்கலைக் கழகத்திற்கு கிடைத்திரு ந்தது. அதன் பிரகாரம் மீதித் தொகையாகிய ரூபா 879,999,997.00 தொகை திறைசேரியில் இருந்து 17 மாடி கட்டிடத்திற்காக கிடைக்க வேண்டிய பணம் ஒன்றாகும். இந்தப் பணம் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உயர்கல்வி அமைச்சு, திறைசேரியில் வெளிநாட்டு மூலவள திணைக்களம் மற்றும் பாதீட்டுத் திணைக்களம் இடையே கலந்துரையாடல் நடாத்தப்படுவதுடன் 2019 ஆண்டின் போது கடன்தொகை ஒன்று ஒப்பந்தக்காரருக்கு வழங்குதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தி ருந்தது. 2019.03.14 கணக்கு சமர்ப்பிக்கும் திகதி அளவில் காணப்பட்ட நிலைமை மீது இந்த விதமாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | சரியான கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்கலைக்கழகத்தின் பீடங்கள் மற்றும் ஏனைய பிரிவுகளுக்காக செலவிடப் பட்ட ரூபா 139,240,643 தொகை பெற வேண்டிய தொகை என கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இந்தப் பணம் ஆய்வுகள் முகாமைத் துவ அலகிற்கு பெறுவனவு ரூபா 1,053,332, மருத்துவ பீடத்திற்கு பெறுவனவு ரூபா 1,132,417 ஆய்வு முகாமைத்துவ அலகில் இருந்து பெறுனவு ரூபா 124,710 பட்டக் கல்வி பீடத்தில் இருந்து பெறுவனவு ரூபா 55,577 பட்டக் கல்வி பீட கட்டிடத்திற்காக கிடைக்க வேண்டிய ரூபா 136,808,614 NEREC இல் கிடைக்க வேண்டிய ரூபா 65,993 ரூபா 1,053,332, ரூபா 124,710, ரூபா 55,577 மற்றும் ரூபா 65,993 தொகைக்கான தொகை இது வரை அவ் அவ் பிரிவுகளில் இருந்து கிடைத்திருந்தது. | சரியான கணக்கீடு செய்ய வேண்டும். பல்கலைக்கழகத் திற்கு ஒவ்வொரு கல்விப் பிரிவுகளில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி உள்ளகக் கொடுக்கல் வாங்கல் என்பதால் நிதிக் கூற்றுக்களில் அவ்வாறு சாட்டுதல் சரியான தன்மையில் இல்லை. |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான சொத்து க்கள் அகற்றப்பட்டமையால் நட்டம் ரூபா 621,955 தொகை எனினும், அது ரூபா 4,175,980 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான இலாபம் ரூபா 3,554,025 இனால் குறைந்திருந்தது. | 2019 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் கூற்றுக்கள்

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் படி பெறுமதி | நேரொத்த கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. | | |
| முதலீடுகள் | 1,783,693,156 | 1,783,293,156 | 400,000 | 2005 ஆண்டின் போது கல்லூரி மாளிகையில் காணப்பட்ட கணக்கு மருத்துவ பீடத்திற்கு மாற்றும் போது கல்லூரி மாளிகை பேரேட்டுக் கணக்கில் காணப்பட்ட தவறு ஒன்றின் காரணமாக ஏற்பட்டிருந்தது. 2019 ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப் பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 முற்பணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக் கழகத்தினால் 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 152,672 தொகை பெறுமதியான நூலக முற்பணம் மீளாய்வாண்டு இறுதியிலும் தீர்த்திருக்கவில்லை. | சஞ்சிகை இருப்பு முடிவடைந்திருத்தல் மீது மற்றும் வெளியிட்டிருக்காமை மீது பல்கலைக் கழகத்திற்கு கிடைத்தி ருக்காமை முற்பணம் தீர்த்தல் தாமதம் அடைந்திருந்தது. அனைத்து சஞ்சிகை களும் கிடைத்த பின்னர் முற்பண தொகையை தீர்த்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | குறிப்பிட்ட கருமம் முடிந்த உடன் முற்பணம் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | முற்பணங்கள் வழங்கும் போது உரிய எதிர்வு கூறல் ஒன்று மீது முற்பணம் வழங்கப்பட வேண்டும். எனனும் 52 சந்தர்ப்பங்களில் ரூபா 1,144,606 இற்கான செலவு ஒன்று மேற்கொள்வதற்கு ரூபா 2,877,187 தொகை முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. மீதியின் வீச்சு ரூபா 1,800 முதல் ரூபா 86,365 வரை காணப்பட்டது. | முற்பணங்கள் தொடர்பாக சட்ட திட்டங்களை உரிய முறையில் செயற்படுத்து மாறு உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | நிதி முகாமைத்துவம் முறைப் பிரகாரம் பேணப்பட வேண்டும். |

## 1.6.2 சட்டங்கள், விதிகள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சன நாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015 ஜுலை 14 திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | பெற்றிருந்த முற்பணம் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்தவுடன் விரைவாக தீர்க்கப்பட வேண்டும். எனினும் 48 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 3,801,491 இற்கான முற்பணங் கள் தீர்ப்பதற்காக 60 நாட்கள் முதல் 291 நாட்கள் வரை தாமதத்திருந்ததுடன் 17 சந்தர்ப்பங்களில் கூட்டுப் பெறுமதி ரூபா 5,528,964 இற்கான பல்வேறு முற்பணங்கள் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்த்திருக்கவில்லை. | முற்பணங்கள் தொடர்பான சட்டங்கள் விதிகள் உரிய முறையில் செயற்படுத்தும் படி உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. | சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடன் இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக தாபனக் கோவை | | | |
| (i) அத்தியாயம் X பிரிவு 1.9 | கணக்காய்வின் மேற் கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது விஞ்ஞான பீட கல்வி பதவியணிக்காக விடுமுறைப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. | இதனை செயற்படுத்து வதற்காக 88 ஆம் கணக்காய்வு குழு கலந்துரையாடப்பட்டது. அங்கு அதனை பீடாதிபதிகள் குழுவின் ஊடாக அறிவூட்டி பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களுக்கும் செயற்படுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டது. | சட்டங்கள் விதிகள் பிரணமாங்களுடன் இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | அத்தியாயம் XX பிரிவுகள் 3.1 மற்றும் 3.2 | கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியில் அனைத்து உத்தியோகத்தர்களும் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லும் நேரங்கள் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும் கல்வி பதவியணி 618 பேரின் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் மற்றும் விடுமுறை என்பவற்றை உறுதிப்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது ரூபா 677,219,763 இற்கான சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தது. | கல்விசார் பதவியணியின் கடமை அலுவல்கள் 08 மணித்தியாலங்களுக்கு வரையறுக்க முடியாது. அதே போல் குறிப்பிட்ட விரிவுரையாளர்களினால் நடத்தும் விரிவுரை களுக்கு பங்கு பற்றும் மாணவர்களின் கையொப்பம் பெற்றுக் கொள்வதற்கு நேரிடுவதால் அது விரிவுரையார்கள் விரிவுரைகளுக்கு வந்ததை உறுதிப்படுத்து கின்றது. அதை போல பல்கலைக்கழக பேரவையினால் அனுமதிக்கப்பட்டிருந்த வழிகாட்டிகளின் படி விரிவுரையாளர்கள் செயற்படுகின்றனர். | பல்கலைக் கழக தாபனக் கோவையின் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மற்றும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சட்டங்கள் விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2015 செப்தெம்பர் 18 ஆம் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக ஆணைக்குழு சுற்றறிக்கை | கடமை வாகனங்கள் உரித்துடைய பதவி வகிக்கும் உத்தியோத்தர்கள் ஒதுக்கப்பட்ட வாகனத்திற்குரிய எரிபொருள் கொடுப்பவு மாதாந்த சம்பளத்துடன் சேகரித்து கொடுப்பனவு செய்யப்பட வேண்டுமெனினும் அதற்கு முரணாக 10 உத்தியோகத்தர்களுக்கு பல்கலைக்கழக எரிபொருள் கட்டளை களின் மூலம் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது எரிபொருள் கட்டளை களின் மூலம் உத்தியோகத்தருக்கு உரிய மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை மிகைத்து ரூபா 1,905,898 இற்கான எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | இதற்காக நிருவாக சபையில் இருந்து கிடைத்திருந்த அங்கீகாரத்தின் படி செயற்பட்டுள்ளது. | சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுக்கு இணங்க அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டு செயற்பாட்டு விளைவுகள் ரூபா 283,376,912 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 100,379,281 தொகையாக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 182,997,631 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. அந்த வளர்ச்சிக்கு மீண்டுவரும் செலவுகளுக்காக அரசாங்க மானியம் ரூபா 739,168,000 இனால் மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள் மற்றும் மறுசீரமைப்பு செலவுகள் முறையே ரூபா 507,820,748 இனால் மற்றும் ரூபா 33,344,325 இனால் அதிகரித்திருந்தல் பிரதானமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆண்டிற்கான 28 பண்டக் கட்டளைகள் தொடர்பாக ரூபா 16,434,490 தொகை பெறுமதியான பண்டங்களை வழங்குவதில் 02 மாதங்கள் முதல் 11 மாதங்கள் வரை தாமதித்த காரணத்தினால் நிறுவனத்தின் வழமையான அலுவல்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. | பண்டங்கள் கிடைப்பதில் தாமதங்கள் காணப்படு கின்றது. வழங்குனர்களுடன் அணுகக் கூடிய உடன்படிக்கைகளை திருத்தி 2019 ஜனவரி முதல் அனைத்து தாமதக் கட்டணங்கள் வழங்குனர் களிடம் தண்டப் பணம் என அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வழங்கள் உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது உடன்படிக்கை களின் நிபந்தனைகள் தொடர்பாக மிகவும் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ஒருவர் தனது சுகவீனம் காரணமாக அடிக்கடி மருத்துவ விடுமுறை, அமைய விடுமுறை ஏழு வருடாந்த விடுமுறை பெற்றிருந்ததுடன் 2018 ஆண்டிற்கான கல்வி நேரசூசியில் இந்த பேராசிரிய ருக்கு விரிவுரை மணித்தியாலம் ஒதுக்கியிருக்காத போதிலும் 09 மாத காலத்திற்காக ரூபா 3,397,055 இற்கான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தது. அதே போல அதே பீடத்தை சேர்ந்த கலாநிதி ஒருவர் ஓய்வுபெற்ற திகதியின் பின்னர் விரிவுரைகளில் கலந்து கொள்ளாமல் சம்பளங்கள் மற்றும் படிகள் என 05 மாதங் களுக்காக ரூபா 1,012,674 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | • அந்த பேராசிரியரினால் அவரின் ஏழு வருடாந்த விடுமுறை காலவரை யறைக்காக 2015.11.01 முதல் 2017.10.31 வரை குறிப்பிட்ட ஆய்வு செயற்பாடு தொடர்பாக விஞ்ஞான பீடத்தின் அங்கீகாரத்துடனான அறிக்கை 2019.03.19 திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்த பேதனாசிரியர் 2019.02.21 திகதிய கடிதத்தின் மூலம் 2019.05.21 திகதி முதல் சேவையை விட்டு விலகு வதாக அறிவித்திருந்தார். அந்த கோரிக்கை பல்கலைக்கழகத்தின் | போதனாசிரியர்களின் கருமங்களை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முகாமைத்துவம் பொருத்தமான வேலைத் திட்டமொன்று மற்றும் அதற்குத் தகுதியான உள்ளகக் கட்டுப்பாடு நடைமுறையொன்று நிறுவப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 2019.04.10 ஆம் திகதி நடைபெற்ற 551 ஆவது நிருவாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>• இந்த போதனாசிரியரின் சேவைக் காலம் விஞ்ஞான பீடத்தின் அந்த கல்வி ஆண்டு இறுதி தினமாகிய 2018.01.14 வரை நீடிக்கப்பட்டதுடன், பல்கலைக்கழக மானியங்களை ஆணைக் குழுவினால் சேவைக் காலத்தை 2018.09.30 திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என விஞ்ஞானபீடத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | விஞ்ஞான பீடத்தில் மற்றும் முகாமைத்துவ பீடத்தில் மீளாய்வாண்டின் போது உள்வாங்கக் கூடிய மாணவர்களின் கொள்திறன் முறையே 515 தொகை மற்றும் 520 தொகை எனினும், சேர்க்கப்பட்டிருந்த மாணவர்கள் எண்ணிக்கை முறையே 501 தொகை மற்றும் 515 தொகை ஆக காணப்பட்டமையால் மாணவர் 19 பேர்கள் பல்கலை அனுமதியை இழந்துள்ளனர். | முகாமைத்துவ பீடத்திற்காக மாணவர்கள் 520 பேருக்கு மாணவ பதிவுக்காக கடிதங்கள் மற்றும் மின் அஞ்சல் மூலம் அறிவித்த போதிலும் பதிவு செய்வதற்காக 515 பேர் மாத்திரமே வந்திருந்தனர். இது தொடர்பாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டது. | கொள்திறனின் படி அனைத்து மாணவ வெற்றிடங்களும் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கலை பீடத்தின் மாணவர்களின் கொள்திறன் 550 என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்திருந்த போதிலும் ஆணைக் குழுவினால் பரிந்துரைத்திருந்த உள்ள வாறாக சேர்க்கப்பட்டவர்கள் 713 தொகையாக இருந்ததுடன் அவை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவுக்கு அறிவித்திருந்த எண்ணிக்கையை விட 29.6 சதவீதம் அதிகரிப்பு ஒன்று ஆகும். | பொதுவாக கலை பீடத்திற் காக சராசரி நுழைவுக்காக 550 மாணவர்கள் பதிவு செய்யப்படுகின்றனர். அதற்கு மேலதிகமாக பின்வரும் காரணங்களினால் மாணவர்கள் எண்ணிக்கை 605 வரை அதிகரித்திருந்தது.<br>❖ விஷேட பாடநெறிகளுக் காக மாணவர் பதிவு செய்தல் (New Admission for Special Subjects)<br>❖ மேலதிக நுழைவுக்காக மாணவர்கள் பதிவு செய்தல் (Addition Intake)<br>❖ விஷேட தேவையுடைய மாணவர்கள் பதிவு செய்தல். (Blind & Disabled Students) | சேர்க்கக் கூடிய உச்ச எண்ணிக்கை சரியாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அறவிக்க வேண்டும். |
| (உ) | கொழும்பு பல்கலைக் கழகத்தின் விடுதி வசதிகளுக்காக விண்ணப்பித்திருந்த மாணவர் களின் எண்ணிக்கை மற்றும் அந்த வசதிகள் கிடைத்திருந்த மாணவர்களின் எண்ணிக்கையை இணக்கஞ் செய்த போது முதலாவது ஆண்டு நான்காவது ஆண்டு வரை மாணவர் தொகுதிகளுக்காக விடுதி வசதிகள் வழங்குதல் முறையே 22,40,44 மற்றும் 33 சதவீதம் என குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான காணப்படும் 17 விடுதிகளில் மேலும் 243 பேருக்கு விடுதி வசதிகள் வழங்குவதற்கு இடவசதிகள் காணப்பட்டது. அவ்வாறு காணப்பட்ட போதிலும் வாடகை அடிப்படையில் 02 விடுதிகள் பெற்று மீளாய்வாண்டின் போது ரூபா 5,400,000 தொகை வாடகையாக செலுத்தப்பட்டிருந்ததுடன், அங்கு தங்கக் கூடிய மாணவர்களின் எண்ணிக்கை 108 எனினும் உண்மையாக 55 மாணவர்கள் மாத்திரமே தங்கியிருந்தனர் என அவதானிக்கப்பட்டது.<br>இது தவிர பிக்குகள் விடுதி 2006 ஆண்டு முதல் குத்தகை அடிப்படையில் தனியார் கட்டிடமொன்றில் நடாத்தப்படு வதுடன் மாதாந்த வாடகை ரூபா | பின்வரும் காரணங்களினால் மாணவர்களை விடுதி களுக்கு இணைப்பதற்கு முடியாதிருந்தது.<br>* முத்தையா விடுதியில் ‘‘பீ’’ கட்டிடத்தின் கூரை மற்றும் சிவிலின் சிதைவடைந்து காணப்பட்டதால் அதன் திருத்த வேலைகள் மேற்கொள்ளும் வரை அந்த கட்டிடத்தில் இருந்த 66 மாணவிகளில் 44 பேர் வேறு விடுதிகளுக்கு (த சேரம் புதியது, ஹவ்லொக், புலர்ஸ்) இணைப்பதற்கு நேரிட்டது.<br>** ஹவ்லொக் விடுதியில் பழைய கட்டிடத்தின் ஒரு பகுதி உடைந்து அகற்ற வேண்டியிருந்ததால் அங்கிருந்த 148 பேர் 2018 ஆகஸ்ட் முதல் அகற்றப்பட்டிருந்தது.<br>***அதே போல் ஹேவா மாவத்தை விடுதியில் மூன்று குளியல் அறைகளில் நீர் ஒழுகுவதனால் 10 மாணவிகளுக்கு விடுதியில் விடுதி வசதிகள் வழங்குவதற்கு முடியாதிருந்தது.<br><br>ராஜகிரிய மற்றும் | மாணவர்களில் விடுதித் தேவை ஏற்கனவே தீர்மானித்தல் மற்றும் காணப்படும் விடுதிகளை வினைத் திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 325,000 தொகை வீதம் 2018 ஆண்டிற்காக ரூபா 3,900,000 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அங்கு 50 பிக்குகள் தங்கக் கூடியதாக இருந்த போதிலும் 15 மாணவ பிக்குகள் மாத்திரம் தங்கியிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. | பொரலஸ்கமுவ விடுதிகள் வாடகை அடிப்படையில் பெற்றிருந்தன. கொழும்பு பல்கலைக்கழகம் வாடகை அடிப்படையில் கிரீன்பாத்தில் அமைந்துள்ள வீடு பிக்குமார் விடுதி ஒன்றாக இது வரை நடாத்துவதற்கு நேரிட்டுள்ள காரணம் பிக்குமார் வேறு வீடு ஒன்றிற்கு செல்வதற்கு மறுப்பதனாலாகும். கொழும்பு பல்கலைக் கழகத்திற்கு பிக்கு விடுதி ஒன்றின் தேவை காணப்பட்ட போதிலும் அதனை நிர்மாணிப்பதற்கு தாமதமடைந்துள்ள காரணம் அந்த விடுதி நிர்மாணிப் பதற்கு பொறுத்தமான காணி ஒன்று இது வரை தேடி எடுப்பதற்கு முடியாமையின் காரணத்தினாலாகும். 2018.05.09 ஆந் திகதி துணை வேந்தர்களினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவருக்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் கொழும்பு பல்கலைக் கழகத்திற்காக பிக்குமார் விடுதி ஒன்றின் தேவை பற்றி அறிவித்திருந்த போதிலும் இது வரை பதில் கிடைத்திருக்கவில்லை. | |
| (ஊ) | நிறுவனத்தினுள் கம்பனி ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் கொள்கைத் தீர்மானம் ஒன்றாக பல்கலைக் கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி அமைச்சரின் பரிந்துரையுடன் அமைச்சரவை அங்கீகாரம் பெற வேண்டும். எனினும் அவ்வாறான அங்கீகாரம் ஒன்று இன்றி கம்பனி சட்டத்தின் பிரகாரம் 2013 ஆண்டின் போது கலம்பு லயன்ஸ் அன்ட் டெக்னொலெஜி ஸெல் என்ற பேரில் பிணையினால் வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த கம்பனியின் தலைமை அலுவலகம் கொழும்பு பல்கலைக் கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கு சொந்தமான கட்டிடமொன்றில் நிறுவப்பட்டு பல்கலைக் கழகத்திற்கு சொந்தமான ஆதனங்களை | இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக 2017 ஜூலை 04 திகதி பி.ப.2.30 மணிக்கு 05 ஆம் இலக்க குழுக் கூட்ட அறையில் கூடிய 93 ஆவது பொது முயற்சிகள் மீதான கூட்டத்தில் அமைச்சின் செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டது. | பல்கலைக் கழகத்தினுள் கம்பனி ஒன்று ஆரம்பிப்பதற்கு முன்னர் தேவையான அங்கீகாரம் மற்றும் பல்கலைக் கழகத்தின் வளங்களை பயன்படுத்துதல் தொடர்பாக பூர்வாங்க இணக்க புரிந்துணர்வு உடன்படிக்கை களுக்கு அணுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்துவது தொடர்பாக இணக்க உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளாமல் கணினிகள் துணைக் கருவிகள் உட்பட ஏனைய பௌதீக மற்றும் மனித வளங்களை பயன்படுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 479,684 இற்கான தொகை மாத்திரம் பல்கலைக் கழகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடன்படிக்கை களை மற்றும் பிணை முறிகளை மீறிய 25 போதனாசிரியர்களிடம் ரூபா 52,650,521 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | உடன்படிக்கை மற்றும் பிணை முறிகளை மீறிய போதனாசிரியர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகையை பல்வேறு முறைகளில் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பிணை முறிகளுக்கான தொகையினை அறவீடு செய்வதால் வினைத்திறனுடன் செயற்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகளுக்காக திறைசேரியில் இருந்து கிடைத்திருந்த ரூபா 565,000,000 இற்கான ஏற்பாடுகளில் ரூபா 141,820,522 தொகை மீண்டுவரும் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. | மூலதன செலவுகளுக்காக கிடைத்திருந்த பணத்தில் ரூபா 141,821,082 தொகை மீண்டுவரும் செலவுகளுக்கு செலவிடப்பட்டுள்ளது. | மூலதன ஏற்பாடுகள் மூலதன தன்மையுள்ள கருமங்களுக்காக மாத்திரம் செலவிடப் பட வேண்டும். |

**3.3 நிதியங்களின் குறை பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 123 நிதியங்களைக் கொண்ட “Designated Fund” என்ற பேரில் காணப்பட்ட நிதியத்தில் மீளாய்வாண்டின் போது கொடுக்கல் வாங்கல் ஒன்றும் மேற்கொள்ளப்படாத 33 நிதியங்களுக்குரிய ரூபா 190,053,440 இற்கான தொகை ஒன்று குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 99 ஆம் பிரிவின் கீழ் அனைத்து நிதியங்களும் ஒரே நிதியத்தின் கீழ் கணிக்கப்படுவதுடன் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 45(w) பிரிவின் பிரகாரம் நிர்வாக சபைக்கு எந்த நிதியமும் பேணப்படு வதற்கு மற்றும் அந்த நிதியத்தை பயன்படுத்து வதற்காக அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது. நிதியக் கட்டுப்பாட்டின் வசதிக்காக நடாத்தப்படும் பேரேட்டுக் கணக்கு ஆகும். மொத்த நிதியங்களின் கூட்டுத்தொகை | நிதியங்கள் ஆக்கப்பட்ட குறிக்கோள்களுக் காக பயன்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ரூபா 1,706,460,042 தொகை ஆகக் காணப்பட்டதுடன் பயன்படுத்தியிருந்த பெறுமதி ரூபா 1139 மில்லியன் தொகையாகும். அதன் பிரகாரம் மொத்த நிதியத்தில் 66.76% பயன்படுத்தப் பட்டுள்ளது. அதே போல் மீதி நிதியம் அவ்வவ் திணைக்களங்களில் மூலதனத்தை தேவைகள் ஏற்படும் போது பயன்படுத்தப்படுகின்றது. | |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விஞ்ஞான பீடத்தின் கே.ஜீ. மண்டபம் புனரமைப்பு மற்றும் கூரையை திருத்துவதற்காக விலைகூறல் அழைப்பு 03 பத்திரிகை களில் வெளியிடப்பட்டிருந்த துடன் ஒவ்வொரு அறிவித்தல் களிலும் காணப்பட்ட முரண்பாட்டுத் தன்மைகளினால் மீண்டும் திருத்தி அறிவித்தல் வெளியிடுவதற்கு நேரிட்டிருந்த காரணத்தினால் நிறுவனத்திற்கு ரூபா 229,185 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | திருத்தப்பட்ட பத்திரிகைகள் அறிவித்தல் பிரசுரிப்பதற்கு நேரிட்டிருந்த காரணம் அறிவித்தல்களில் காணப்பட்ட முரண்பாட்டு தன்மைகளினால் அல்ல. ஒரு விலைகூறல் தாரரினால் CIDA நிறுவனத்திற்கு எழுத்துமூல அறிவித்தல் மீது CIDA நிறுவனத் தினால் வழங்கியிருந்த ஆலோசனையின் படி விலைகூறல் பத்திரங்கள் வழங்குவதற்கு கால நீடிப்பு செய்வதற்கு நேரிட்டுள்ளமையே ஆகும். | பெறுகை அலுவல் கள் உரிய முறையில் திட்டமிடப்பட வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 723 தொகை காணப்பட்டதுடன் உள்ளவாறான எண்ணிக்கை 586 தொகையாகக் காணப்பட்ட மையால் 137 வெற்றிடங்கள் காணப்பட்டது. இவற்றில் சிரேஷ்ட பேராசிரியர் பதவிகளில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டன. கல்விசாரா பதவியணியில் 183 வெற்றிடங்கள் காணப்பட்டது. | 2018 ஆண்டின் போது புதிதாக ஆட்சேர்ப்புக்கள் 62 மேற்கொள்ளப்பட்டதுடன் வருட இறுதி அளவில் அதற்கு ஒப்பாக கலாநிதிகள் 24 பேர் சேவையில் இருந்து ஓய்வு பெறல், இடமாற்றம், சேவையில் இருந்து விளகுதல், சேவையை உரிதாக்கியதாக கணித்தல், சேவை முடிவுறுதல், சேவையில் இருந்து விடுவிப்பதன் மூலம் பதவியணியினர் விலகுதல் ஆகிய காரணங்களினால் கணிசமான எண்ணிக்கையான வெற்றிடங்கள் பல்கலைக்கழக த்தில் ஏற்படுவதை தவிர்த்தல் முடியாது என மேலும் அறிவிக்கின்றேன். எவ்வாறாயினும், இந்த வெற்றிடங்களை நிரப்பும் செய்முறை இடையறாமல் நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. | வெற்றிடங்களை விரைவாக நிரப்பப் பட வேண்டும். |